| O.S.No. 74/2021 | PW1: திருமதி. சுமதி<br>க/பெ. திரு. சிவகணேசன் | 10-09-2025 |
| --- | --- | --- |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் கொடநகரில் வசித்து வருகிறேன். 1-ம் பிரதிவாதி என் தாயார். 2-ம் பிரதிவாதி சுரேஷ்பாலாஜி என் சகோதரர். வழக்கு சொத்துக்களை தெரியும். A ஷெட்யூல் சொத்து அசனமாபேட்டையில் உள்ள காலிமனை ஆகும். B ஷெட்யூல் சொத்து பைங்கினர் எல்லையில் உள்ள காலிமனை ஆகும். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனக்குரிய பாகத்தை சரியாக பிரித்துக்கொடுக்காமல் எனக்கு தெரியாமல் எழுதி வாங்கிக்கொண்டதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். B ஷெட்யூல் சொத்தினை எனக்கு பிரித்து கொடுக்கவில்லை என்பதால்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். B ஷெட்யூல் சொத்து உட்பட எண். 172, காந்தி சாலையில் உள்ள சொத்தும் எனக்கு பிரித்து தரவேண்டிய சொத்து ஆகும். இன்றைய தேதிவரை பாகம் பிரித்து தர சொல்லி வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. A ஷெட்யூல் சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். A ஷெட்யூல் சொத்து என் தாயாருக்கு எப்படி வந்தது என்றால் என்னுடைய பாட்டி என் தாயாருக்கு எழுதி வைத்ததின் அடிப்படையில் வந்தது. A ஷெட்யூல் சொத்து முழுவதையும் எனது தாயார் எனக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்தார். மேற்படி A ஷெட்யூல் சொத்தில் பாதியை நான் 2-ம் பிரதிவாதிக்கு தானமாக செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அதனால், A ஷெட்யூல் சொத்தில் 2-ம் பிரதிவாதிக்கு பாதி பாகமும், எனக்கு பாதி

பாகமும் உரிமை உள்ளது என்றால் சரிதான். எனது தாயாரும், 2-ம் பிரதிவாதியும் என்னை மிரட்டியதால்தான் A ஷெட்யூல் சொத்தில் பாதியை 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தேன். நான் 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் முழு சம்மதத்துடன் எழுதிக்கொடுப்பதாக வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் தூண்டுதலின் பேரில் எழுதிக்கொடுத்ததாக வாசகம் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு தான உ எழுதிக்கொடுத்தற்கு பிறகு தோரயமாக 1 வருடம் கழித்து நான் 2-ம் பிரதிவாதிக்கு தாவா A ஷெட்யூல் சொத்தில் பாதியை தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தேன்.

3. வா.சா.ஆ.3 ஆவணம் கலர் ஜெராக்ஸ் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் அருள்மொழி என்பவரிடம் உள்ளது. வா.சா.ஆ.3 அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுத்தேன், திரு. அருள்மொழி என்பவர் 2 பேருக்கும் பொதுவான நபர் என்று சொல்லி ஆவணத்தை கொடுக்க மறுத்துவிட்டதால் அசலை தாக்கல் செய்ய முடியவில்லை. பஞ்சாயத்து நடந்தது என்றும், அதில் ஒரு ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் நான், என் கணவர், என் தாயார், என் அண்ணன், அண்ணன் மனைவி, அருள்மொழி, அவரது மனைவி, அவரது மகன்கள் ஆகியோர் இருந்தனர். சொத்து பிரிப்பது சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்தது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் A ஷெட்யூல் சொத்தில் பாதி என் தாயாருக்கு ஒதுக்கப்படுவதாக எழுதப்பட்டது. அதில்,

நான் எனது தாயாரான 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

4. A ஷெட்யூல் சொத்து 2019-ல் எனது பெயரில் மாற்றினார்கள், அதனால் பாகப்பிரிவினை வரும்போது அதில் பாதியை என் தாயாருக்கு எழுதி கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், என் தாயார் பெயரில் பத்திரம் எழுதப்படவில்லை என்று சொன்னால் என் தாயார் 2-ம் பிரதிவாதி பெயரில் எழுத சொன்னதால் 2-ம் பிரதிவாதி பெயரில் அருள்மொழி அவர்களால் எழுதப்பட்டது. வா.சா.ஆ.3 ஆவணமானது நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல, வா.சா.ஆ.3-ன் படி நான் நடந்துகொண்டேன், பிரதிவாதிகள்தான் நடந்துகொள்ளவில்லை. வா.சா.ஆ.3 ஆவணமானது உண்மையில் ஏற்பட்டதா இல்லையா என்பதை பொருத்து அருள்மொழி என்பவரை விசாரித்தால் தெரியும் என்று சொன்னால் சரிதான்.

5. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பஞ்சாயத்தில் முடிவு செய்யப்பட்டது சம்மந்தமாக சொத்தினை எழுதிக்கொடுக்க வேண்டும் என சொல்லி அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணப்படி சொத்தினை பிரித்து தரவேண்டும் என சொல்லி வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணமானது வழக்கிற்காக என்னால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. B ஷெட்யூல் சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். B ஷெட்யூல் சொத்தினை எனது தாயார் அவரது விருப்பப்படி யாருக்கு வேண்டுமானாலும் கிரையம் கொடுக்கலாம் என்றால் சரிதான், ஆனால் பஞ்சாயத்தில் அவர் அதுபோல் சொல்லவில்லை.

6. B ஷெட்யூல் சொத்து என் தாயார் கிரையம் பெற்ற சொத்து ஆகும். B ஷெட்யூல் சொத்தினை என் தாயார் 2-ம் பிரதிவாதி பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணப்படி B ஷெட்யூல் சொத்து 2-ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்றால் எனது தாயார்தான் ரத்து செய்யவேண்டும். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய என் தாயார் இதுவரை எவ்வவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நடவடிக்கை எடுத்தார்கள், அதனை 2-ம் பிரதிவாதி தடுத்துவிட்டார். என் தாயார் அதுபோல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. எனது தாயாரை 2-ம் பிரதிவாதிதான் சென்னையில் சவரட்சனை செய்து வருகின்றார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு நானும், 2-ம் பிரதிவாதி மட்டுமே வாரிசுகள் ஆவோம். என்னை எனது தந்தை M.Sc., B.Ed., வரை படிக்க வைத்தார். நான் அதன்பிறகு என் பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்துகொண்டேன் என்றால் இல்லை, அவர்களின் விருப்பத்தோடுதான் திருமணம் செய்துகொண்டேன். என் பெற்றோர்கள் எனக்கு காஞ்சிபுரம் குமரகோட்டம் கோவிலில் திருமணம் செய்து வைத்தார்கள். என் தாய் தந்தையர் விருப்பத்தோடு எங்களது திருமணம் நடைபெறவில்லை என்றாலும், அவர்களின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்துகொண்டோம் என்றாலும் சரியல்ல. அதனால்தான், நான் காஞ்சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் கோவிலில் திருமணம் செய்து கொண்டேன் என்றாலும், அதனால் என் தாய் தந்தையருக்கு என் மீது

வெருப்பு ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எனக்கும் என் தாய் தந்தையருக்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய செய்கையினால்என் தந்தை மனமுடைந்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, அவர் கேன்சர் நோயினல் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார்.

8. என் சகோதரர் ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். காந்தி ரோட்டில் உள்ள சொத்து மட்டுமே பாகம் பிரியாத சொத்து என்றாலும், அதனை பிரித்து தரும்படி எனது சகோதரர் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரிதான். B ஷெட்யூல் சொத்தினை எனது தாயார் தான செட்டில்மெண்ட் 2-ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்ததை செல்லாது என கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் A ஷெட்யூல் சொத்தை முழு மனதோடு 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டதால்,அதைப்பொறுத்து செல்லாது என சொல்ல எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. A ஷெட்யூல் சொத்தில் பாதி பட்டா 2-ம் பிரதிவாதியின் பெயரில் மாறிவிட்டது. B ஷெட்யூல் சொத்திற்கான பட்டா 2-ம் பிரதிவாதி பெயரில் மாறிவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பில் B ஷெட்யூல் சொத்திற்கான பட்டா அவரது பெயரில் மாறிவிட்டதாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் அவ்வாறு சொல்லவில்லை.

9. தாவா A ஷெட்யூல் சொத்தில் பாதியும், B ஷெட்யூல் சொத்தை பொருத்தும் 2-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் ஆச்சாரத்திற்கு வந்துவிட்டது என்று சொன்னாலும், அதனை ஆட்சேபிக்க

எனக்கு எவ்விவத உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு போடவேண்டும் என்றால் பஞ்சாயத்துப்படி ஆவணங்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்றுதான் வழக்கு போட்டிருக்கவேண்டும் என்றாலும், ஆவணங்களை பொருத்து செல்லாது என கோருவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால், என்னுடைய வழக்கு அடிப்படைடியிலேயே நிலைக்கத்தக்கதல் என்றாலும், தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.10 19:45:51 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**